Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 18.05.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவண குமார்

தேதி : 18.05.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 5 நாடுகளுக்கான ஆறு நாள் பயணத்தின் அடுத்த பகுதியாக இன்று, நார்வே சென்றுள்ளார்.

மேற்காசிய நெருக்கடி காரணமாக, இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும், நாட்டில் கச்சா எண்ணெய் கையிருப்பு போதிய அளவில் இருப்பதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வெப்ப அலையின் தாக்கத்தில் இருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள, மத்திய ஆயுஷ் துறை அமைச்சகம், விரிவான பொது சுகாதார அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது.

புதுச்சேரியில், உப்பளம் தொகுதி அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன், தற்காலிக சபாநாயகராக, இன்று பதவியேற்றுக்கொண்டார்.

*மோடி நார்வே -1 (13)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 5 நாடுகளுக்கான ஆறு நாள் பயணத்தின் ஒரு பகுதியாக இன்று, நார்வே சென்றுள்ளார். நார்வே தலைநகர் ஓஸ்லோ-வில் அந்நாட்டுத் தலைவர்களை அவர் சந்தித்து, இதுதரப்பு பேச்சு வார்த்தை நடத்துவார். 3ஆவது இந்தோ—நார்டிக் உச்சி மாநாட்டிலும் அவர் பங்கேற்கிறார். பிரதமர் திரு. நரேந்திர மோடி, நார்வே நாட்டிற்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை என்பதும், குறிப்பிடத்தக்கது. நார்வேயில், வர்த்தகம் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான இந்தோ—நார்வே உச்சி மாநாட்டிலும் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்கிறார். இந்தியாவிற்கும், நார்வே உள்ளிட்ட 5 நார்டிக் நாடுகளுக்கும் இடையே, பாதுகாப்பு, புதுமையாக்கம், ஆர்க்டிக் பிராந்திய ஆராய்ச்சி, மக்கள் நிலையிலான தொடர்பு உள்ளிட்ட துறைகளில், இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த சிறப்பு கவனம் செலுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது. பிரதமரின் வெளிநாட்டுப் பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

*மோடி நார்வே -2 வாய்ஸ் (12)*

**(வாய்ஸ்)**

<u>பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஸ்வீடனில் இருந்து நார்வே செல்லும் முன்பாக, சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில், தமது ஸ்வீடன்</u>

பயணத்தினால், இருதரப்பு உறவுகளுக்கு புதிய உத்வேகம் கிடைத்திருப்பதாக கூறினார். அடுத்த 5 ஆண்டுகளுக்குள், இருதரப்பு வர்த்தகத்தை இரட்டிப்பாக்கவும், இந்தோ—ஸ்வீடன் தொழில் நுட்ப மற்றும் ஏ.ஐ. நெடும்பாதை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்தியாவில் தயாரிப்போம், ஸ்விடனுடன் தயாரிப்போம் திட்டங்களின் கீழ், பசுமை ஹைட்ரஜன், செமி கண்டக்டர் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை ஆழமாக்கவும், தீர்மானிக்கப் பட்டுள்ளது. ஸ்வீடன் அரசு, வெளிநாட்டு அரசுத் தலைவர்களுக்கான அந்நாட்டின் மிக உயரிய Polar Star—Royal Order விருதை, பிரதமர் திரு.நரேந்திர மோடிக்கு வழங்கி சிறப்பித்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

*ராஜ்நாத் (10)*

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், வியட்நாம்—தென் கொரியா ஆகிய இரண்டு நாடுகளுக்கான பயணமாக, இன்று புதுடெல்லியில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். பயணத்தின் முதல் கட்டமாக, வியட்நாமில் அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு அமைச்சரை அவர் சந்தித்து, ராணுவ ஒத்துழைப்பு, மற்றும், பாதுகாப்பு உற்பத்தி துறையில் கூட்டாண்மையை வலுப்படுத்துவது குறித்தும், இந்தோ—பசிபிக் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை மேம்படுத்துவது குறித்தும் விவாதிப்பார். நாளை மே 19ஆம் தேதி, முன்னாள் வியட்நாம்

அதிபர் ஹோச்சி மின் பிறந்த நாளை ஒட்டியதாக, பாதுகாப்பு அமைச்சரின் வியட்நாம் பயணம் அமைவதும் குறிப்பிடத்தக்கது.

*கோயல் (11)*

உலக அளவில் நிச்சமற்ற சூழல் மற்றும் பல்வேறு சவால்கள் காணப்படும் நிலையிலும், இந்தியா வேகமாக முன்னேறி வருவதாக, மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பாரத் வியாபார்—வர்த்தக திருவிழாவிற்கான இணைய தளத்தை தொடக்கி வைத்துப் பேசிய அவர், தொடர்ந்து முன்னேற வேண்டும் என்ற உத்வேகம் ஒருபோதும் குறையக்கூடாது என்றும், அனைவரும் அயர்வின்றி தொடர்ந்து உழைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மத்திய தொழில் வர்த்தக அமைச்சகமும், அகில இந்திய வர்த்தகர் கூட்டமைப்பு உள்ளிட்ட அமைப்புகளும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள, பாரத் வியாபார், வர்த்தகத் திருவிழா, ஆகஸ்ட் 12 முதல், 15ஆம் தேதி வரை புதுடெல்லியில் நடைபெறும்.

*பெட்ரோல் நிலவரம் -1 (20)*

நாட்டில் அனைத்து எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளும் இயல்பான முறையில் செயல்பட்டு வருவதாகவும், மேற்காசிய நெருக்கடி காரணமாக, இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும், கச்சா எண்ணெய் கையிருப்பு

போதிய அளவில் இருப்பதாகவும், மத்திய அரசு தெரிவித்துள்ளது. அண்மைக்கால மேற்காசியா நிலவரங்கள் குறித்து, சம்பந்தப்பட்ட பல்வேறு அமைச்சகங்கள் இணைந்து, இன்று புதுடெல்லியில் நடத்திய செய்தியாளர் கூட்டத்தில் மத்திய பெட்ரோலியத் துறை இணைச் செயலர் திருமதி சுஜாதா ஷர்மா இதை தெரிவித்தார். நாட்டில் பெட்ரோல், டீசல், எல்பிஜி மற்றும் இயற்கை எரிவாயு கையிருப்பு போதிய அளவில் உள்ளதாக, அவர் கூறினார். எந்த ஒரு எல்பிஜி ஏஜென்சியிலும், கையிருப்பு காலியாகாத நிலையில், வதந்திகளால் ஏற்படும் பீதி காரணமாகவே, சில இடங்களில் மக்கள் அவசர கதியில் எல்பிஜி வாங்கி வருவதாகவும், இத்தகைய எல்பிஜி ஏஜென்சிகளில், கையிருப்பை உடனுக்குடன் நிரப்ப நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த 4 நாட்களில் வீட்டு உபயோகத்திற்கான 1 லட்சத்து 72 ஆயிரம் எல்பிஜி சிலிண்டர்கள், விநியோகம் செய்யப் பட்டுள்ளதாகவும், இம்மாத ஆரம்பத்தில் இருந்து இதுவரை,1 லட்சத்து 8 ஆயிரம் டன் வர்த்தக எல்பிஜி விற்கப பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை, குழாய் மூலமான 7 லட்சம் PNG இணைப்புகளுக்கு எரிவாயு வழங்கப் பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

*பெட்ரோல் நிலவரம்-2 (18)*

ரசாயனத் துறை இணைச் செயலர் திருமதி அபர்ணா ஷர்மா இன்று செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில், காரீஃப் பருவம் முழுவதற்கும்

தேவையான உரங்களில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமான கையிருப்பு, தற்போது உள்ளதாக தெரிவித்தார். நெருக்கடி தொடங்கியது முதல் நாட்டில் இதுவரை, கணிசமான அளவில், 86.2 லட்சம் டன் உரங்கள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளதாகவும், 22 லட்சம் டன் இறக்குமதி உரங்கள், இந்தியாவிற்கு வந்து சேர்ந்து இருப்பதாகவும் அவர் கூறினார். முக்கிய உரங்களின் அதிகபட்ச சில்லரை விலையில் மாற்றம் இல்லை என்றும், அவர் தெரிவித்தார்.

மார்ஷல் தீவுகளில் இருந்து, 19 ஆயிரத்து 965 டன் எல்பிஜி ஏற்றிய கப்பல், கடந்த சனிக்கிழமை இரவு, குஜராத் மாநிலம் கண்ட்லா துறைமுகத்திற்கு வந்து சேர்ந்து இருப்பதாக கப்பல் துறை கூடுதல் செயலர் திரு. முகேஷ் மங்கல் தெரிவித்தார். கடந்த 96 மணி நேரத்தில் இந்தியாவின் வர்த்தக கப்பல்கள், அல்லது, வெளிநாட்டுக் கப்பல்களில் உள்ள இந்திய சிப்பந்திகள் எதுவும் தாக்கப்பட்டதாக தகவல் இல்லை என்றும் அவர் கூறினார். பிணக்குப் பகுதிகளில் உள்ள இந்தியர்களுக்குத் தேவையான உதவிகளை உடனுக்குடன் வழங்க இந்தியத் தூதரகங்கள் 24 மணி நேரமும் செயல்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை கூடுதல் செயலர் திரு. அசிம் மஹாஜன் கூறினார்.

*வெப்ப அலை-1 (07)*

நடப்பு கோடையின் போது வெப்ப அலையின் தாக்கத்தில் இருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள, மத்திய ஆயுஷ் துறை

அமைச்சகம், விரிவான பொது சுகாதார அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது. வெய்யில் நேரத்தில் வெளியில் அலைவதை தவிர்க்கவும், போதிய அளவில் நீர் அருந்தி உடலில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக் கொள்ளவும், மெலிதான பருத்தி ஆடைகளை அணியவும், அறிவுறுத்தப் பட்டுள்ளது. இது குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

*வெப்ப அலை -2 வாய்ஸ் (14)*

**(வாய்ஸ்)**

ஹீட்—ஸ்டிரோக் பிரச்சனையில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில், தலைவலி, மயக்கம், வாந்தி, உடல் சூடு போன்ற அறிகுறிகள் குறித்து கவனமாக இருக்க வேண்டும் என்றும், இத்தகைய அறிகுறிகள் தீவிரமானால், அவசர கால உதவிக்கு, 108, 102 ஆகிய எண்களை அணுகலாம் என்றும் ஆயுஷ் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. குறிப்பாக குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள், முதியவர்கள், நாட்பட்ட நோய்களால் பாதிக்கப் பட்டவர்கள், மற்றும் வெய்யிலில் வேலை செய்பவர்கள் கூடுதல் கவனத்துடன் இருக்கவும், பணியிடங்கள் மற்றும் அதிக அளவில் மக்கள் கூடும் நிகழ்ச்சிகளில் நிழற்பந்தல் அமைக்கவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. சித்தா—ஆயுர்வேதா உள்ளிட்ட இந்திய மருத்துவ மரபுகளின் படி, நீர்மோர், பானகம், மற்றும் இளநீர் அருந்தவும், நீர்ச்சத்து அதிகமுள்ள வெள்ளரி போன்ற காய்கறிகள் மற்றும் தர்பூசணி

உள்ளிட்ட பழங்களை அதிகம் எடுத்துக்கொள்ளவும் ஆயுஷ் துறை அமைச்சகம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

*கேரளம் (14)*

கேரளத்தில் புதிய முதலமைச்சராக திரு. V.D. சதீஷன், புதிய முதலமைச்சராக இன்று பதவியேற்றுக் கொண்டார். திருவனந்தபுரம், சென்ட்ரல் விளையாட்டு அரங்கில் இன்று நடைபெற்ற விழாவில், கேரள ஆளுநர் திரு. ஆர்.வி. அர்லேக்கர், திரு. சதீஷன் தலைமையிலான 21 உறுப்பினர் அமைச்சரவைக்கு, பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதில் 16 பேர், முதல் முறையாக அமைச்சர் பதவி ஏற்றுள்ளனர். புதிய அமைச்சரவையில், காங்கிரஸ் சார்பில், 11 பேரும், IUML சார்பில் 5 பேரும், இடம் பெற்றுள்ளனர். பதவியேற்பு விழாவில், காங்கிரஸ் தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே, மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமய்யா, தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி, ஹிமாச்சல் முதலமைச்சர் திரு. சுக்விந்தர் சிங் சுக்கு, முதலமைச்சர் பதவியில் இருந்து வெளியேறும் திரு. பினராய் விஜயன், மாநில பிஜேபி தலைவர் திரு. ராஜீவ் சந்திர சேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*அன்பழகன் - (09)*

புதுச்சேரியில், 16ஆவது சட்டப் பேரவையின் தற்காலிக சபாநாயகராக, உப்பளம் தொகுதி அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன், இன்று பதவியேற்றுக்கொண்டார். லோக் நிவாசில் நடைபெற்ற விழாவில் ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், திரு. அன்பழகனுக்கு, பதவியேற்பு உறுதி மொழி செய்து வைத்தார். விழாவில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அமைச்சர்கள் திரு. நமசிவாயம், திரு. மல்லாடி கிருஷ்ணாராவ், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலர் திரு. சரத் சௌஹான், அரசுச் செயலர்கள், மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*காரைக்கால் – குறைதீர்ப்பு (06)*

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி முன்னிலையில், இன்று நடைபெற மக்கள் குறை தீர்ப்பு முகாமில், மாவட்ட அளவிலான அனைத்து துறை அதிகாரிகளும் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர். குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு, விரைவாக தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் உறுதி அளித்தார்.

*வானிலை (12)*

வளிமண்டல சுழற்சி மற்றும் காற்றழுத்த தாழ்வுப் பாதைகள் காரணமாக, இன்று, கோவை—திருச்சி மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், கரூர், சேலம், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்ளின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும் உள் தமிழகத்தின் ஒருசில இடங்களில் மிதமான மழைக்கும், தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரி—காரைக்கால் பகுதிகளில் லேசான மழைக்கும் வாய்ப்பு இருப்பதாக வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 24ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

*ஐ.பி.எல் (09)*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு சென்னையில் நடைபெறும் போட்டியில், சென்னை—ஹைதராபாத் அணிகள் மோதவுள்ளன. தற்போது ஹைதராபாத் அணி, புள்ளிப் பட்டியலில், 3ஆவது இடத்திலும், சென்னை அணி, 5ஆவது இடத்திலும் உள்ளன. நேற்று இரவு டெல்லியில் நடைபெற்ற போட்டியில், டெல்லி அணி, 5

விக்கெட் வித்தியாசத்தில், ராஜஸ்தான் அணிக்கு எதிராக வெற்றி பெற்றது. தரம்சாலாவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில், பெங்களூரு அணி, 23 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியைத் தோற்கடித்து, Play-Off சுற்றுக்குத் தகுதி பெற்றது.

*கடல் சார் தினம் (09)*

இந்தியாவில் கடல்சார் துறையில் ஈடுபடும் பெண்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்து வருவதாகவும், ஆழமான கொள்கை சீர்திருத்தங்களே இதற்கு காரணம் என்றும், மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார். சர்வதேச பெண் கடலோடிகள் தினத்தை ஒட்டி இன்று அவர் வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியாவின் மகளிர் சக்தி, உலக அளவிலான கடல்சார் துறையை, பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி செலுத்தி வருவதாகவும், இந்தியப் பெண் கடலோடிகளின் அயராத துணிவிற்கு தாம் தலைவணங்குவதாகவும் கூறியுள்ளார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 5 நாடுகளுக்கான ஆறு நாள் பயணத்தின் அடுத்த பகுதியாக இன்று, நார்வே சென்றுள்ளார்.

மேற்காசிய நெருக்கடி காரணமாக, இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும், நாட்டில் கச்சா எண்ணெய் கையிருப்பு போதிய அளவில் இருப்பதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வெப்ப அலையின் தாக்கத்தில் இருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள, மத்திய ஆயுஷ் துறை அமைச்சகம், விரிவான பொது சுகாதார அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது.

புதுச்சேரியில், உப்பளம் தொகுதி அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன், தற்காலிக சபாநாயகராக, இன்று பதவியேற்றுக்கொண்டார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.